அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 06/2016

எனது இல. CS/SLAS/AMEN/MINUT/(தொகுதி III)
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07
2016 மார்ச் மாதம் 17 ஆந் திகதி .

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,

**<u>இலங்கை நிர்வாக சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் அரசகரும மொழியான தமிழ் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவைப்பாட்டில் இருந்து விலக்களித்தல்.</u>**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 வலுவிலிருக்கும் தினத்தில் இருந்து இலங்கை நிர்வாக சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அடுத்துள்ள அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டியுள்ளமையினால், 2007.07.01 ஆந் திகதியில் இருந்து 2012.01.02 ஆந் திகதி வரை இலங்கை நிர்வாக சேவையின். 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் ( உதா: 2007 மட்டுப்படுத்தப்பட்ட, 2009 திறந்த, 2010 மட்டுப்படுத்தப்பட்ட, 2010 திறந்த ஆகிய) அவர்களது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்துள்ள அரசகரும மொழித் தேர்ச்சியை பூரணப்படுத்த வேண்டியது அவசியமில்லை என்பது பற்றி அறியத் தருகின்றேன்.

02. ஏற்கவே 2007.07.01 ஆந் திகதியில் இருந்து 2012.01.02 ஆந் திகதி வரை இலங்கை நிர்வாக சேவையின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு, நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்துள்ள அரசகரும மொழித் தேர்ச்சியை உரிய தினத்தில் பூரணப்படுத்தாமை காரணமாக, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதியின் 111 ஆம் பிரிவின் கீழ், நன்னடத்தைக் காலம் நீடிக்கப்பட்டு, நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர்களாக இருப்பின், அவ்வாறு நன்னடத்தைக் கால நீடிப்பினை திருத்திமைப்பதற்கான குறித்த கோரிக்கைகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு இவ் அமைச்சுக்கு அனுப்பி வைக்கும்படி மேலும் அறியத் தருகின்றேன்.

03 இச் சுற்றறிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.



ஜே. தடல்லகே
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு